நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.5, திருநெல்வேலி.

**முன்னிலை: திரு.S. பாக்கியராஜ்., பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண்.5 (மு.கூ.பொ), திருநெல்வேலி.**

2025–வது வருடம், மார்ச் மாதம், 21ம் நாள் வெள்ளிக்கிழமை

**திருவள்ளுவராண்டு 2055, குரோதி வருடம், பங்குனி திங்கள், 07–ம் நாள்**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். **2747/2022**

(**CNR No.**TNTL 04 – 018302 – 2022)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
மானூர் காவல் நிலையம்,
திருநெல்வேலி மாநகரம்.
**குற்ற எண்.51/2022** ––– குற்றமுறையீட்டாளர்

–எதிராக –

1. சுப்பிரமணியன் (வயது 32/25)
   த/பெ. ஆண்டி
   தெற்கு தெரு, சம்பூத்து
   திருநெல்வேலி.
2. சுடலைமணி (வயது 53/25)
   த/பெ. முத்தையா
   மானூர், திருநெல்வேலி.
3. கார்த்திக் (வயது 29/25)
   த/பெ. மாடசாமி
   கிழக்கு தெரு, சம்பூத்து
   உக்கிரன்கோட்டை
   திருநெல்வேலி.
4. குமரேசன் (வயது 34/25)
   த/பெ. ஆண்டி
   தெற்கு தெரு, சம்பூத்து
   திருநெல்வேலி. ––– எதிரிகள்

இவ்வழக்கு 24.11.2022–ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்து இன்று 21.03.2025–ம் தேதி இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பாக வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதிJ.ஏஞ்சல்செல்வராணி.,B.Com.,M.L.,(பொறுப்பு) அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.முத்துராஜ்.,B.A.,B.L.,, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும்

ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் ஆழ்ந்த பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இறுதியாக இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

1). அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 23.02.2022 ம் தேதியன்று மாலை 15.00 மணிக்கு சம்பூத்து கீழத்தெருவில் இறுதி ஊர்வலம் சாட்சி ராகு வீட்டின் வழியாக செல்லும்போது வெடி போட்டவர்களிடம் 1, 2 சாட்சிகள் கொஞ்சம் தள்ளிபோடுங்கள் வீட்டிற்குள் வெடி வெடிக்கிறது என்று சொன்னதற்கு 1வது எதிரி சாட்சி செல்வன் (எ) ஜோசுவாவை பார்த்து அப்படித்தான் வெடி போடுவோம் நீ யார் எங்களை கேட்கிறதுக்கு என்று கீழே பிடித்து தள்ளி இடது கரண்டை காலிற்கு மேல் 2வது சாட்சிக்கு ரத்த காயத்தை ஏற்படுத்தியும், 1வது சாட்சி 1வது எதிரியிடம் ஏன் என் அப்பாவை கீழே தள்ளினீர்கள் என்று கேட்கவும், 1 முதல் 4 எதிரிகள் அனைவரும் சேர்ந்து புகார்தாரரை பார்த்து ஏலே தேவுடியா மவுனே செறுக்கிவுள்ள வெடி அப்படித்தான் போடுவோம் என்னல என்னலே செய்ய முடியும் என்று அனைவரும் கெட்ட வார்த்தை பேசிக்கொண்டு 1வது எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து சாட்சி ராகுவின் இடது தோள்பட்டையில் அடித்ததில் தோள்பட்டையில் சிராய்ப்பு காயத்தை ஏற்படுத்தியும், 3வது எதிரி சாட்சி 2 செல்வன் (எ) ஜோசுவா கையில் வைத்திருந்த இரும்பு கைத்தடியை பிடுங்கி இடது கரண்டை காலுக்கு மேல் அடித்து இடது கரண்டை காலுக்கு மேல் சிறுகாயத்தை ஏற்படுத்தியும், 4 வது எதிரி கையில் இருந்த கம்பால் சாட்சி ராகுவின் நெஞ்சில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தியும், 2வது எதிரி குமரேசன் கையால் சாட்சி 1 ராகுவின் உதட்டில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், 1 முதல் 4 எதிரிகள் சேர்ந்து தாயோழிகளா இன்றைக்கு தப்பித்து வீட்டீர்கள் இனிமேல் எங்களிடம் மோதினால் கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று கொலைமிரட்டல் விடுத்த குற்றம் புரிந்துள்ளதால் எதிரிகள் இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)–ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் என மானூர் காவல் உதவி ஆய்வாளர் இந்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)–ன் கீழ் வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கி, எதிரிகளிடம் இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)–ன் படியான குற்ற சங்கதிகள் பற்றி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்தார்கள். ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளதாக முதல் நோக்கில் தெரிந்தமையால் எதிரிகளின் மீதான இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)–ன் படி குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூறி வினவப்பட்ட போது எதிரிகள் குற்றச்சாட்டுகளை மறுத்து விசாரணை செய்யப்பட வேண்டுமென வேண்டினார்கள்.

3). அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>4) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு:</u>**

4(1) அ.சா.1 ரகு மற்றும் அ.சா.2 செல்வன் ஆகியோர் தங்கள் சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும் என்றும், சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 05.00 மணியளவில் சம்பூத்து கீழதெருவில் உள்ள தங்கள் வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தபோது சுமார் 10, 15 நபர்கள் கூட்டமாக ஓடி வந்து கீழே தள்ளிவிட்டு சென்றார்கள் என்றும் அதில் கீழே விழுந்ததில் அ.சா.1 க்கு இடது பக்க தோள்பட்டை, இடது கால், உதடு ஆகிய இடங்களிலும், அ.சா.2 க்கு இடது காலில் காயம் ஏற்பட்டது என்றும், தங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு டிவிளம்சி மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருக்கும் போது வந்த போலீசார் தங்களிடம் எழுதாத வெற்று பேப்பரில் கையொப்பம் வாங்கி சென்றார்கள் என்றும், தங்களிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தங்களுடையது தான் என்றும் அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தங்களுக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

4(2) அ.சா.3 உதவி ஆய்வாளர் சந்திரன் தனது சாட்சியத்தில் கடந்த 23.02.2022ம் தேதியன்று 15.00 மணிக்கு மானூர் காவல் நிலையத்தில் தலைமை காவலர் முண்டசாமி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது டிவிஎம்சி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த அ.சா.1, அ.சா.2 ஆகியோர்களின் காயத்தகவலையும், புகார் வாக்குமுலத்தையும் பெற்று அதன் அடிப்படையில் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கினை உதவி ஆய்வாளர் பழனி அன்றைய தினமே புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் அசாஆ–6 பார்வைமகஜர் மற்றும் அசாஆ–7 வரைபடம் தயார் செய்தும், சாட்சிகள் அனைவரையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தும், எதிரியை தேடிவந்த நிலையில் 03.03.2022ம் தேதியன்று மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்றுவிட்டதால் கைது நடவடிக்கை இல்லை என்றும், பின்னர் அ.சா.1, 2 ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் ஸ்ரீஹரி என்பரை விசாரித்து வாக்குமுலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றதாகவும், பின்னர் வழக்கு சம்பவத்தில் நான்கு எதிரிகள் மட்டுமே ஈடுபட்டதாக தெரிய வந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 147, 294(பி), 323, 324, 286, 506(2) என்பதிலிருந்து இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 286, 506(2)ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து அனுப்பி வைத்ததாகவும், சாட்சிகளின் வாக்குமூலத்திலிருந்தும், அவரது புலன் விசாரணையில் இருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகள் மீது 26.04.2022ம் தேதி இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)ன் படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**5)** அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் எதிரிகளிடம் விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் சாட்சியம் என்றும், இந்த வழக்கு பற்றி வேறு

ஏதாவது கூற வேண்டுமா? என்று வினவிய போது பொய் வழக்கு என்றும், எதிரிகள் பக்கம் விசாரிக்க சாட்சிகள் எவரும் உண்டா? என்று வினவிய போது சாட்சிகள் இல்லை என்று கூறினர்கள். பின்பு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் எதிரிகள் தரப்பில் சாட்சி விசாரணை இல்லை என்று குறிப்புரை செய்ததின் பேரில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6)** இந்த வழக்கில் எதிரிகள் மீது சாட்டப்பட்ட இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)-ன் படியான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தற்போது இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது ஆகும்.

**7)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அரசுத்தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.3 தனது சாட்சியத்தில் தலைமை காவலர் முண்டசாமி என்பவர் அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், உதவி ஆய்வாளர் பழனி இவ்வழக்கை புலன் விசாரணை செய்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் மூலம் எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் வாதிட்டார்.

**8)** எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்கள் சாட்சியத்தில் சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 05.00 மணியளவில் சம்பூத்து கீழதெருவில் உள்ள தங்கள் வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தபோது சுமார் 10, 15 நபர்கள் கூட்டமாக ஓடி வந்து கீழே தள்ளிவிட்டு சென்றார்கள் என்றும் அதில் கீழே விழுந்ததில் அ.சா.1 க்கு இடது பக்க தோள்பட்டை, இடது கால், உதடு ஆகிய இடங்களிலும், அ.சா.2 க்கு இடது காலில் காயம்

ஏற்பட்டது என்றும், தங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு டிவிஎம்சி மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருக்கும் போது வந்த போலீசார் தங்களிடம் எழுதாத வெற்று பேப்பரில் கையொப்பம் வாங்கி சென்றார்கள் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தங்களுக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகிவிட்டார்கள் என்றும் அசா.3 ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எதிரிகள் தரப்பில் அரசுத் தரப்பு சாட்சிகள் வழக்கின் குற்றச் சம்பவத்துடன் எதிரிகளை இணைவுபடுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்றும் எனவே எதிரிகளின் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் கொண்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் எனவே எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதம் புரிந்தார்.

**9)** அரசு தரப்பில் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம் அ.சா.ஆ–1 ஆகவும், புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2ன் அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ–2 ஆகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ–3 ஆகவும், காயத்தகவல் அறிக்கைகள் (2 எண்ணம்) அ.சா–ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ–6 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ–7 ஆகவும், அ.சா.1ன் விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.8 ஆகவும், அ.சா.1ன் காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகவும், அ.சா.2ன் விபத்து பதிவேடு நகல் அ.சா.ஆ.10 ஆகவும், அ.சா.2ன் காயச்சான்று அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**10)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை பரிசீலித்து பார்க்கும் போது அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்கள் சாட்சியத்தில் சுமார் 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலை 05.00 மணியளவில் சம்பூத்து கீழதெருவில் உள்ள தங்கள் வீட்டின் முன்பாக நின்று கொண்டிருந்தபோது சுமார் 10, 15 நபர்கள் கூட்டமாக ஓடி வந்து கீழே தள்ளிவிட்டு சென்றார்கள் என்றும் அதில் கீழே விழுந்ததில் அ.சா.1க்கு இடது பக்க தோள்பட்டை, இடது கால், உதடு ஆகிய இடங்களிலும், அ.சா.2க்கு இடது காலில் காயம் ஏற்பட்டது என்றும், தங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு டிவிஎம்சி மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருக்கும் போது வந்த போலீசார் தங்களிடம் எழுதாத வெற்று

பேப்பரில் கையொப்பம் வாங்கி சென்றார்கள் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தங்களுக்கு தெரியாது என்றும் சாட்சியமளித்து பிறழ் சாட்சியாகிவிட்டார்கள். அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர் புகார் வாக்குமூலத்திற்கும், அரசு தரப்பு வழக்கிற்கும் எதிராக சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகி விட்டார்கள். வழக்கின் குற்றச்சம்பவத்துடன் எதிரிகளை இணைவுபடுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

**11)** அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர் புகார் வாக்குமூலத்திற்கும், அரசு தரப்பு வழக்கிற்கும் எதிராக சாட்சியமளித்து பிறழ்சாட்சியாகி விட்டார்கள் என்பதால் இதர சாட்சிகளை விசாரிப்பதால் வழக்கில் எந்த முன்னேற்றமும் ஏற்பட போவதில்லை என்பதால் இதர சாட்சிகளை நீக்கம் செய்து சாட்சிப் பட்டியலில் குறைவு செய்யப்பட்டனர். ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.3 தனது சாட்சியத்தில் தலைமை காவலர் முண்டசாமி என்பவர் அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமுலத்தினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும், இவ்வழக்கை உதவி ஆய்வாளர் பழனி புலன் விசாரணை செய்து எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு சாட்சிகளில் எந்த ஒரு சாட்சியும் எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டியதாகவோ, எதிரிகள் சாட்சியை கையால் அடித்து காயப்படுத்தியதாகவோ, கல்லாலும், கம்பியாலும் அடித்து காயப்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல் செய்ததாகவோ குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் வழக்கின் குற்றச் சம்பவத்துடன் எதிரிகளை இணைவுபடுத்தி எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை. அரசு தரப்பு சாட்சிகளில் எந்த ஒரு சாட்சியும் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் விதமாக எவ்வித சாட்சியமும் கூறவில்லை.

**12)** மேற்கண்டவாறு விவாதித்துள்ளதின் படியும் மேற்கண்ட பரிசீலனையின் படியும் அரசு தரப்பு சாட்சிகளில் எந்த ஒரு சாட்சியும் எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக திட்டியதாகவோ, எதிரிகள் சாட்சியை கையால் அடித்து காயப்படுத்தியதாகவோ, கல்லாலும், கம்பியாலும் அடித்து காயப்படுத்தியதாகவோ, கொலை மிரட்டல்

செய்ததாகவோ குறிப்பிட்டு எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை என்றும், எனவே, எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)–ன் படியான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் ஐயமற நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**13)** மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளதன் படி எதிரிகளுக்கு எதிரான இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)–ன் படி குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் கொண்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**14)** முடிவாக மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்தபடி அரசுத்தரப்பு வழக்கில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)–ன் படியும் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

**15)** இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அதுபற்றிய உத்தரவு இல்லை.

**16)** இந்த வழக்கு எதிரிகள் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று சென்றுள்ளார்கள். மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் எழுதிக் கொடுத்த பிணைமுறி பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

**17)** இவ்வழக்கின் தீர்ப்பின் மீது மேல்முறையீடு அல்லது மனு எதுவும் தாக்கல் செய்யப்படுமானால், மேல்முறையீட்டு நீதிமன்ற உத்தரவு அல்லது அழைப்பாணையின் பேரில் எதிரி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு கு.வி.மு.ச பிரிவு 437A–ன்

கீழ் எழுதிக் கொடுத்த பிணைப்பத்திரம் இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு பின்னர் தாமாகவே ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 21.03.2025–ம் தேதி திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S PACKIARAJ
Digitally signed by S PACKIARAJ
Date: 2025.03.21 19:48:51 +0800

நீதித்துறை நடுவர் எண்.5(மு.கூ.பொ)
திருநெல்வேலி.

**<u>பின்னிணைப்பு :</u>**

**<u>1. அரசுத்தரப்பு சாட்சிகள் :</u>**

1. திரு. ரகு
2. திரு. செல்வன்
2. திரு. சந்திரன் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

**<u>2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :</u>–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 23.02.2022 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 23.02.2022 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.2 ன் அறிவேன் சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 23.02.2022 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | 23.02.2022 | காயத்தகவல் அறிக்கைகள் (2 எண்ணம்) |
| அ.சா.ஆ.5 | 23.02.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 23.02.2022 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.7 | 23.02.2022 | வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 23.02.2022 | அ.சா.1 ன் விபத்து பதிவேடு நகல் |
| அ.சா.ஆ.9 | 07.04.2022 | அ.சா.1 ன் காயச்சான்று |
| அ.சா.ஆ.10 | 23.02.2022 | அ.சா.2 ன் விபத்து பதிவேடு நகல் |
| அ.சா.ஆ.11 | 26.04.2022 | அ.சா.2 ன் காயச்சான்று |

**<u>3. அரசுத் தரப்பு சான்று பொருள்</u> : இல்லை**

**<u>4. எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை**

S PACKIARAJ

Digitally signed by S PACKIARAJ
Date: 2025.03.21 19:48:57 +0800

நீதித்துறை நடுவர் எண்.5(மு.கூ.பொ)
திருநெல்வேலி.

<u>பின்குறிப்பு</u>

1) சாட்சிகள் 3 தினங்களுக்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.

2) சம்மந்தப்பட்ட காவல்துறையினருக்கு தீர்ப்பு குறித்து அறிக்கை அனுப்பப்பட்டது.

3) தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.